சுற்று நிருபம் :- இல 1993/07

எனது இல:- 2/விபுபாந/1/9
விளையாட்டுத்துறை புறப்பாடவிதான
நடவடிக்கைகள் கிளை,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய'
பத்தரமுல்ல.

மாகாணக் கல்விச் செயலாளர்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

உடற்கல்வி ஆசிரியருக்கான
கடமை நேரங்களும் பாடப்போதனையும்

உடற்கல்வி, விளையாட்டு ஆசிரியர்களாக நியமனம்பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக அல்லது கல்வியியற் கல்லூரியின் தகவுத் தேர்வுப் பத்திரம் பெற்றவர்களாக அல்லது பயிற்றப்படாத ஆசிரியர்களாக அல்லது பயிலுநர் ஆசிரியர்களாக இப்பதவியை வகிக்கின்ற சகல ஆசிரியர்களும் உடற்கல்விப் பாடத்தினைப் படிப்பித்தல் வேண்டும். அவர்கள் வேறு பாடங்களை படிப்பிப்பதற்கு அழைக்கப்படக் கூடாது.

தற்சமயம், உடற்கல்வி, விளையாட்டு ஆசிரியர்களாக நியமனம் பெற்று வேறு பாடங்களைப் படிப்பிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் இருப்பின், இவர்களுக்கு உடற்கல்விப் பாடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். தேவையான பாடவேளைகள் ஒதுக்கப்பட முடியாத நிலை இருப்பின் அத்தகைய ஆசிரியர்கள் வெற்றிடங்கள் உள்ள வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். அல்லது வாரத்தில் சில நாட்களுக்கு வேறு பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு உடற்கல்வி ஆசிரியரும் வாரத்தில் குறைந்த பட்சம் 20 மணித்தியாலங்களேனும் உடற்கல்விப் பாடத்தினைப் படிப்பித்தல் வேண்டுமென்பதுடன் விளையாட்டுக்களினதும், பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளினதும் ஆரம்பத் திறன்களைப் போதிப்பதாக மட்டுமே இப்பாடவேளைகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

பல்வேறு விளையாட்டுக்களுக்காகப் பாடசாலைக் குழுக்களுக்குப் பயிற்சியளித்தல், பாடசாலைக் கடெற்றுக்களுக்குப் பயிற்சியளித்தல் என்பன பாடசாலை நேரசூசியில் சேர்க்கப்படாமல் அவை பாடசாலை நேரத்தின் பின்னர் மாலை வேளைகளில் நடத்தப்படுதல் வேண்டும்.

பாடசாலை நேரத்தின் பின்னர் மாலை நேரங்களில் பயிற்சியளித்தலுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற நேரமானது அங்கீகரிக்கப்பட்ட நேரசூசியில் சேர்க்கப்படலாம்.

எம். டீ. டீ. பீரிஸ்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு

பிரதிகள்:

1. வலயப்பணிப்பாளர்
2. கோட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்
3. பி.க.ப/ உ.க.ப உடற்கல்வி

} தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைகளுக்காகவும்